# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.140/2025

**Deposition of Witness for Prosecution PW 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜா | Father's Name | : | பன்னீர்செல்வம் |
| Village | : | திருவாரூர் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 50 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 17th day of February 2026.**

**(A1, A2 are present. A4 died. A3 absent. For A3 petition U/s. 355 BNSS is filed and allowed).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தனிப்பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். திருவாரூர் தாலுகா காவல் நிலைய கு.எண் 152/2017 வழக்கு கோப்பினை பார்வையிட்டதில் எதிரிகள் காவலரின் வாகனத்தை சேதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இருசக்கர வாகனத்தில் மோதி சேதப்படுத்தவில்லை எனவும் எதிரிகள் போலீசாரின் மீது காரை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.17 17:15:36 +0530

ஏற்றி கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் சம்பவம் நடைபெற்றதாக தெரிய வந்ததால் 31.07.2017 அன்று இவ்வழக்கின் சட்டப் பிரிவினை இதச பிரிவுகள் 189, 307 & 3(1) of TNPPDL Act லிருந்து இதச பிரிவுகள் 189, 307 ஆக சட்டப் பிரிவு மாறுதல் செய்து அறிக்கை சமரப்பித்தேன். அந்த சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.12**. 31.07.2017 அன்று உதவி ஆய்வாளர் ராஜேஷ்கண்ணனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து 08.08.2017 அன்று எதிரிகள் மீது இதச பிரிவுகள் 189, 307 ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் சேதமடைந்த இருசக்கர வாகனம் மற்றும் 4 சக்கர வாகனம் ஆகியவற்றை மோட்டார் வாகன பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை என்றால் சரி. என்னுடைய விசாரணையில் அந்த இருசக்கர வாகனம் பயிற்சி உதவியாளர் கபிலனுடையது என தெரிந்து கொண்டேன். அந்த வாகனத்திற்கான சேத மதிப்பு சான்று எதுவும் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இரு சக்கர வாகனத்தின் சேத மதிப்பு குறித்து கலர் போட்டோக்கள் எடுத்து தாக்கல் செய்யவில்லை. என்னுடைய விசாரணைபடி சன்னாநல்லூர் பால் அருகே Parry Guard மற்றும் டேங்கர் லாரி வைத்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.17 17:15:43 +0530

மறைத்ததாக சாட்சிகள் யாரும் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரி. குற்ற பத்திரிகையுடன் விபத்தில் எதிரிகள் காயம்பட்டதற்கான காயச்சான்று எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கின் எதிரிகள் சம்பவத்திற்கு முன்பே முன் குற்றவாளிகள் என்பது எனக்கு தெரியும். விளமல் கூட்டுறவு நகரிலிருந்து சன்னாநல்லூர் பாலம் வரை நான்கு சக்கர வாகனம் சென்ற இடமெல்லாம் CCTV Camera பொறுத்தப்பட்டிருந்தது என்றால் சரி. CCTV Footage தாக்கவில்லை என்றால் அது வழக்கிற்கு தேவையில்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. CCTV Footage எடுக்கவில்லை என்றால் தவறு. எதிரிகள் முன் குற்றவாளிகள் என்பதால் அவர்கள் மாயூரம்-திருவாரூர் சாலையில் வரும்போது எதிர்பாரா விதமாக ஏற்பட்ட விபத்தில் அவர்கள் முன் குற்றவாளிகள் என்பதால் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.17 17:15:49 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.